## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்

## மடத்துக்குளம்

## அசல் வழக்கு எண்.151/2019

இன்று 2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 16 ம் நாள் இன்று இந்த சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 வது பிரிவு ஏற்பாட்டின் படி) திரு.M.தீனதயாளன், பி.ஏ., பி.எல்., மடத்துக்குளம் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையிட்டு உறுதி மொழி செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | காளீஸ்வரி (PW2) |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | ஆறுமுகம் |
| வயது | : | |
| கிராமம் | : | |
| தொழில் | : | |
| வட்டம் | : | மடத்துக்குளம் |
| மாவட்டம் | : | திருப்பூர் |

முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் மூன்றாம் நபர் ஆவேன். வழக்கு விபரம் தெரியும். நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் சோழமாதேவி தெற்கு தெருவில் வசிக்கிறேன். ஹோட்டல் வேலை செய்கிறேன். எனது கணவர் பெயர் ஆறுமுகம். அவரது கையெழுத்து எனக்கு தெரியும். எனது மாமனார் பெயர் பொன்னுச்சாமி. எனது கணவர் 9 மாதங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். விஜயராஜ் மற்றும் ஆறுமுகம் இருவர் இடையே ஏற்படுத்தப்பட்ட கிரைய ஒப்பந்தத்தில் எனது கணவர் சாட்சியாக கையொப்பம் போட்ட விவரம் எனக்கு தெரியாது. அவரது கையெழுத்தை பார்த்தால் என்னால் சொல்ல முடியும். சாட்சியிடம் வா.சா.ஆ.1 ஆவணம் காண்பிக்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள சாட்சிகள்

கையெழுத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து எனது கணவர் ஆறுமுகம் என்பவரது கையெழுத்து தான்.

**வா.சா.ஆ. 4 – சாட்சியின் ஆதார் அட்டை ஒளி நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது)**

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.02.16 17:45:46 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்